# தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்

(தமிழ்நாடு அரசின் நிறுவனம்)

கரூர் சாலை, மல்லாச்சிபுரம், கம்பரசம்பேட்டை, திருச்சிராப்பள்ளி – 620 101

முனைவர் ம. கோவிந்த ராவ், இ.வ.ப.,
நிர்வாக இயக்குநர்


<u>ந.க.எண்.வ1/1431/2016</u> <u>நாள்: 29 –04–2016</u>

பெறுநர்
மாவட்ட வன அலுவலர்,
திருச்சி கோட்டம்,
நீதிமன்ற வளாகம்,
திருச்சி – 1.

அய்யா,

பொருள் : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் முசிறி நகருக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு – 2006 அய்யம்பாளையம் தைலத்தோட்டத்தின் வழியாக நடைபாலம் அமைப்பதற்கு நிலம் கேட்பது – தொடர்பாக.

பார்வை: 1) செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி எண்.23/F Musiri WSIS/Forest – 16, நாள் 02.03.2016

2) இவ்வலுவலக எண் வ1/1431/2016, நாள் 14–03–2016

3) மண்டல மேலாளர், புதுக் கோட்டை எண்.கு/1232/2016 நாள் 21.04.2016

– - -

பார்வை –1ல் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி அவர்கள், G.O.Ms.No.27 Municipal Administration and Water Supply (WS3) Department நாள் 10.02.2016 ன்படி, முசிறி நகருக்கு காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்கு திட்டம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இதன்படி தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் பொறுப்பில் உள்ள 2006 அய்யம்பாளையம் தைலத்தோட்டத்தில் 10 M X 10M (0.10 ஹெக்டர்) அளவுக்கு குடிநீர் குழாய் கொண்டு செல்வதற்கு நடைபாலம் அமைப்பதற்கு இடம் தேவைப்படுகிறது என்று அனுமதி கேட்டிருந்தார்.

..2..

இதன்படி இவ்வலுவலக பார்வை (2)ல் கேட்டுக் கொண்டதற்கிணங்க பார்வை (3)ல் புதுக் கோட்டை மண்டல மேலாளர் மேற்கண்ட இடத்தை GPS கருவி மூலம் நிலஅளவை செய்து, அதன் பரப்பளவு 0.16 ஹெக்டர் (160 M X 10M) என்று கணக்கிடப்பட்டது. இப்பரப்பளவிலுள்ள (0.16 ஹெக்டர்) தைல மரங்களில் இருந்து கழகத்திற்கு வருவாய் இழப்பு ரூ.1,11,000/– என்றும் கணக்கிடப்பட்டது.

வனத்தோட்டக் கழகத்திற்கு ஏற்படும் மேற்கண்ட இழப்பீட்டுத் தொகை ரூ.1,11,000/–ஐ குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து பெற்று இக்கழகத்திற்கு செலுத்திய பின் மேற்கண்ட நிலப்பகுதியை (0.16 ஹெக்டர்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வனச்சட்டம் 1980 பிரிவின் கீழ் வழங்குவதற்கு இக்கழகத்திற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் மேற்கண்ட நிலப்பகுதிக்கு தொடர்பான வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

தங்கள் அன்புள்ள,

ஒம்/– (ம. கோவிந்த ராவ்)
நிர்வாக இயக்குநர்

இணைப்பு: மேலே கூறியபடி

நகல் :
செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
நகர்புற குடிநீர் திட்டக் கோட்டம்,
J.K. நகர், காஜாமலை,
திருச்சி – 23

இப்பொருள் தொடர்பாக மாவட்ட வன அலுவலர், திருச்சி அவர்களை தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நகல் : மண்டல மேலாளர், புதுக் கோட்டை – தகவலுக்காகவும்,
தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

–/உ.ந/உ.படி/–

22/4/16

முதுநிலை வரைத்தொழில் அலுவலர்

SFR,
noted
2/5/16
AEE

ராரா.